**கவனிக்க.**- 2007.09.28 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1518 - 2007 ඔක්තෝබර් 05 වැනි සිකුරාදා - 2007.10.05**

*1518 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 877 |


**கவனிக்க.**- (i) வியாபாரப் பண்ட அறவீடு சட்டமூலம் 2007. ஓகத்து 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) **கவனிக்க.**-உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2007. ஓகத்து 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) **கவனிக்க.**-பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2007. ஓகத்து 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஒற்றோபர் 12 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, செத்தெம்பர் 28 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத்தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத்தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஆயுர்வேத திணைக்களம்

*ஆயுர்வேத மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்த்தல் - 2007*

ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் மாணவ தாதியர் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்ப்பதற்கு கீழ் குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வித் தகைமைகள்.**- (அ) பழைய பாடத்திட்டத்தின் கீழ் க. பொ. த. (உ. தர.) பரீட்சையில் ஒரே அமர்வில் தோற்றி விஞ்ஞான பாடத்துறையின் 4 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் அல்லது புதிய பாடத்திட்டத்தின் கீழ் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் தோற்றி விஞ்ஞான பாடத்துறையில் 3 பாடங்களில் சித்தியடைந் திருத்தல்.

அத்துடன்

(ஆ) க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சிங்களம்/ தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 04 திறமைச் சித்திகள் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

கல்வித் தகைமைகளை நிரூபிக்கும் பொருட்டு மேற்கூறிய இரு பரீட்சைகளினதும் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட ஒளிப்படப்பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2. **ஏனைய தகைமைகள்.**- (அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ)2007.11.05 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(இ) உயரம் : 4 அடி 10 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும் ;

(ஈ) விவாமாகாதவராக இருத்தல் வேண்டும் ;

(உ) தாங்கள் விண்ணப்பிக்கும் மாவட்டத்திற்குள் 3 வருட வதிவை நிரூபிக்கும் பொருட்டு தேர்தல் பட்டியலில் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரரின் பெயர் வாக்காளர் பெயர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டில்லாவிடின் அவரது பெற்றோர்களின் பெயர்கள் தேர்தல் பட்டியலில் இருத்தல் வேண்டும்.

தங்களது பெற்றோர்களின் பெயர்களே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன என்பதனை நிரூபிக்கும் பொருட்டு பிறப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும் ;

(ஊ)பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களின் பிள்ளைகள் விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் போது உரிய வைத்தியர், பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியரொருவர் என்பதனை நிரூபிக்கும் பொருட்டு ஆயுர்வேத வைத்திய சபையின் சான்றிதழும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கேற்ப 13" x 8" அளவுடைய தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ)விண்ணப்பப் படிவத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி அதைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆயுவர்வேத மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்த்தல் - 2007" எனக் குறிப்பிட்டு 2007.11.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு "ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, மகரகம" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் தபாலில் தொலைந்து போதல் மற்றும் தாமதமாதல் தொடர்பில் வகை கூறப்படமாட்டாது.

இலங்கையில் நிருவாக சேவையின் / கல்விச் சேவையின் / அரசாங்க கணக்காளர் சேவையின்/அரசாங்க பாடசாலையின் அதிபர்/ சமாதான நீதவான்/சட்டத்தரணி ஒருவர் அல்லது ஆண்டொன்றுக்கு ரூபா 80,160 க்கு குறையாத ஆரம்பச் சம்பளத்துடனான பதவியொன்றை வகிக்கும் அரசாங்க அலுவலர் ஒருவர் மூலம் விண்ணப்பகாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

4. **தெரிவு செய்யப்படும் முறையும் பயிற்சியளிக்கும் நடை முறையும்.**-

(அ) விண்ணப்பதாரர்கள் மத்தியிலிருந்து தகுதியானவர்களைத் தெரிவுசெய்யும் பொருட்டு ஆயுர்வேத திணைக்களத்தினால் திறந்த எழுத்துப் போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன் அதில் உயர்புள்ளிகளைப் பெறும் விண்ணப்பகாரர்கள் நேர்முகப் பரீட்சை பொருட்டு அழைக்கப்படுவார்கள். போட்டிப் பரீட்சை பொருட்டு பின்வரும் பாடத்துக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட 1 மணித்தியால வினாத்தாளொன்றுக்கு எல்லா விண்ணப்பகாரர்களும் தோற்றுதல் வேண்டும் :-

பாடத்திட்டம் :
- பொது உளச்சார்பு
- பொது அறிவு
- விடயம் தொடர்பான அறிவு

(ஆ)நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பகாரர் களுக்கு நேர்முகப் பரீட்சையிலும் புள்ளிகள் வழங்கப்படுவதுடன் போட்டிப் பரீடசை புள்ளியினதும் நேர்முகப் பரீட்சைப் புள்ளியினதும் அடிப்படையில் விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்குழு புள்ளிகளை வழங்கும் நடைமுறை பின்வருமாறு :-

(1) தொழிற்றுறை அறிவும் அனுபவமும்
(2) பாரம்பரிய வைத்தியர்களின் பிள்ளைகள் பொருட்டான உச்ச புள்ளிகள் 30
(3) ஆளுமை

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் ஆயுர்வேத மாண தாதியராக ஆயுர்வேத திணைக்களத்தின் சுதேச வைத்திய முறை

பற்றிய தேசிய நிறுவனத்துக்கு அனுப்பப்படுவார்கள் .அத்துடன் அவர்கள் சிங்களம்/ தமி மொழி மூலம் 3 வருட பயிற்சி நெறியைப் பின்பற்றுதல் வேண்டும்.

(இ) பயிற்சியின் பொருட்டு சேர்த்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் சுதேச வைத்திய முறை பற்றிய தேசி நிறுவனத்தில் செயற்படுத்தப்படும் சட்ட திட்டங்கள் பயிலுநர்களுக்கு வழங்கப்படும். இச்சட்ட திட்டங்களுக்கும் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற பிற சட்டதிட்டங்களுக்கும் அவர்கள் அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ஈ) பயிற்சிக் கால காலப்பகுதியில் குறித்த பரீட்சைகளில் சித்தியடையாத அல்லது வேலை, நடத்தை திருப்தியற்ற அல்லது அல்லது பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகத் தவறும் பயிலுநர்களின் பயிற்சி எச்சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடும் இன்றி நிறுத்தப்பட முடியும்.

பயிற்சிக் காலப்பகுதியில் பயிலுநர்கள் எவ்வித லீவுக்கும் உரித்துடையவர்கள் அல்லர் என்பதுடன் பயிற்சியின் பொருட்டு வருகை தராத நாள்களுக்கு கொடுப்பனவிலிருந்து விகிதாசார ரீதியில் ஒரு தொகை கழிக்கப்படும். எது எவ்வாறு இருப்பினும் பரீட்சையில் தோற்றும் பொருட்டு ஒவ்வொரு வருடத்திலும் 80% வருகை கட்டாயமாகும்.

(உ) சுதேச வைத்திய முறை பற்றிய தேசிய நிறுவனத்தில் பயிற்சி பெறும் காலப்பகுதியில் பயிலுநர்களுக்கு பின்வருமாறு கொடுப்பனவு செலுத்தப்படும் :-

(1) முதலாம் வருடம் : மாதாந்தம் ரூபா 12,920
(2) இரண்டாம் வருடம் : மாதாந்தம் ரூபா 13,040
(3) மூன்றாம் வருடம் : மாதாந்தம் ரூபா 13,160

(ஊ) பயிற்சிக் காலத்தின் போது பயிற்சியிலிருந்து விலகியிருப்பின் அல்லது பயிற்சியை விட்டுச் சென்றிருப்பின் பயிற்சிக் காலத்தின்போது அவருக்குச் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவு அத்துடன் பயிற்சிக்காக அரசாங்கம் செலவிடும் செலவுகள் ஆகியவற்றின் பொருட்டு செலவிடப்பட்ட தொகையை, அவர் திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும். இந்நோக்கத்தின் பொருட்டு நிரூபிக்கப்படக்கூடிய வருடாந்த வருமானம் ரூ. 3,00,000 அல்லது அதற்குக் கூடிய வருமானத்தைப் பெறும் இரு பிணையாளர்களுடனான ஒப்பந்தமொன்றில் விண்ணப்பகாரர் கைச்சாத்திடுதல் வேண்டும்.

5. **விவாகமாகாதிருக்க வேண்டிய நிபந்தனைகளும் ஒப்பந்தங்களும்.**- (அ) சகல விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்கும் திகதியில் விவாகமாகாதவராக இருக்க வேண்டும் என்பதுடன் பயிற்சி பெறும் மூன்று வருடங்களிலும் விவாகமாகாதவராக இருத்தல் கட்டாயமாகும். விவாகம் ஆகாதவர் என்பதை நிரூபிக்கும் பொருட்டு பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் ஒன்று விண்ணபத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) மாணவ தாதியர் பயிற்சி பாடசாலையான சுதேச வைத்திய முறை பற்றிய தேசிய நிறுவனத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் பயிற்சியை வெற்றிகரமான நிறைவுசெய்வதெனவும் அப்பயிற்சியின் பின்னர் சேவையிலிருந்து ஓய்வுபெறும் வரையில் ஆயுர்வேத திணைக்களத்தில் சேவையாற்றுவதெனவும் உறுதிகூறி ஆயுர்வேத ஆணையாளருடன் ஒப்பந்தம் ஒன்றை விண்ணப்பகாரர் செய்து கொள்ளுதல் வேண்டும். இக்காலப்பகுதியில் ஆயுர்வேத ஆணையாளர் காலத்துக்கு காலம் இதனை பரிசீலனை செய்வார்.

6. **சேவையில் ஈடுபடுத்தும் ஒழுங்குவிதிகள்**.- (அ) மேற்குறிப்பிட்ட படி பயிற்சியின் பின்னர் நடைபெறும் இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் III தர தாதியர் பதவிக்கு உரிய சம்பள அளவுத்திட்டத்தின் பதவி வெற்றிடங்களினால் நியமனங்கள் வழங்கப்படும்.

(ஆ) இத்தாதியர் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தலானது அரசாங்கத்தின் ஆயுர்வேத தாதியர் சேவையில் கட்டாயமாக நிரந்தரப் பதவியொன்றை பெறுவதற்கான உரிமை ஆகாது.

(இ) தாதியர் பதவிக்கு நியமித்தலானது 3 வருட தகுதிகூர் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும் என்பதுடன் அது ஓய்வூதிய உரித்துடைய பதவியுமொன்றாகும்.

7. **சேவை நிபந்தனைகளும் சம்பள அளவுத்திட்டமும்**.-

(அ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 06/2006 இன் MT - 7-2006 இன் பிரகாரம் ரூபா 15,080 - 5 x 150 - 9 x 240 - 7 x 240 - 20 x 320 - ரூபா 26,420 சம்பள அளவுத்திட்டத்தில் தாதி அலுவலர் III ஆம் தர பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்கள் பொருட்டு நியமிக்கப்படும்.

(ஆ) தாதியர் சேவையின் சகல அலுவலர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் சட்டதிட்டங்களுக்கும் அயுர்வேத தாதியர் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும், ஆயுர்வேத திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் கொள்கைகளுக்கும் ஏற்ப மேற்கொள்ளப்படும் இடமாற்றங்களுக்கும், நிதி மற்றும் பிற ஒழுங்குவிதிகளுக்கும் அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

அசோக மாலிமகே
செயலாளர்,
சுதேச வைத்தியத்துறை அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேதத் திணைக்களம்**

மாணவ தாதியர் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்தல்

1. (அ) முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

(ஆ) முழுப்பெயர் (தமிழில்) :-----.

2. தபால் முகவரி (ஆங்கிலத்தில்) :-----.

3. (i) நிரந்தர முகவரி (தமிழில்) :-----.

(ii) மாவட்டம் (ஆங்கிலத்தில்) :-----.

4. பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

5. (i) பால் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(ii) விவாகமானவர்/தனிநபர் :

| | |
|---|---|
| விவாகமானவர் | |
| தனிநபர் | |

பொருத்தமான கூட்டில் (√ ) அடையாளம் இடவும் :-----.

6. நீங்கள் இலங்கைப் பிரஜையா என்பது பற்றி :-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

பொருத்தமான கூட்டில் (√ ) அடையாளம் இடவும் :-

7. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :-----.

8. உயரம் : அடி :-----. அங்குலம் :-----.

9. பயிற்சியைப் பின்பற்றும் மொழிமூலம் :-

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |

(பொருத்தமான கூட்டில் (√ ) அடையாளம் இடவும்.)

10. (அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உ. த.) பரீட்சை (விஞ்ஞானத்துறை) (புள்ளிகளின் பிரதியை இணைக்கவும்) :

(1) வருடம் :- பரீட்சைச் சுட்டெண் :-----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(ஆ) க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சை :
முதலமர்வு :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :-----.

(ii) பரீட்சையின் சுட்டெண் :-----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |
| 11. | | |
| 12. | | |

இரண்டாம் அமர்வு :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :-----.

(ii) பரீட்சையின் சுட்டெண் :-----.

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |
| 11. | | |
| 12. | | |

11. நீங்கள் ஏதேனும் குற்றம் பொருட்டு நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

"ஆம்" எனின், விபரம் தருக :-----.

12. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் கௌரவபூர்வமாக வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) ஆட்சேர்க்கப்படுவதற்கு முன் என்னால் கொடுக்கப்பட்ட தகவல்கள் ஏதும் பொய்யானது என நிரூபிக்கப்படின் நான் ஆட்சேர்க்கப்படுவதற்கான தகைமையை இழப்பேன் என்பதனையும் நியமிக்கப்பட்ட பின் அவ்வாறு நிரூபிக்கப்படின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதனையும் நான் அறிவேன்.

.......................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

14. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற ...................... ..................................................... என்பவரை நான் தனிப்பட்டவிதத்தில் அறிவேன் எனவும், அவர் 2007 ......................................... ஆந் திகதி என் முன்னிலையில்

அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.......................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10-193

---

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - இந்து சமயம் - 2007

**பரீட்சை நிபந்தனைகளும் பாடத்திட்டமும்.**- மேற்படி பரீட்சை 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் இலங்கை முழுவதும் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நடைபெறும் நிலையங்கள்.**- விண்ணப்பதாரிகளின் தொகைக்கேற்ப நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

எனினும், குறிப்பிட்ட தொகையான விண்ணப்பதாரிகள் ஒரு பரீட்சை நிலையத்திற்கு விண்ணப்பிக்காத பட்சத்தில், அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அருகிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்திற் தோற்றுமாறு விண்ணப்பதாரிகள் கோரப்படுவர். நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்பட உத்தேசிக்கப் பட்டுள்ள பரீட்சை நிலையங்கள் தொடர்பான விபரங்கள் இவ்வறிவித்த லின் இறுதியிலே சேர்க்கப்பட்டுள்ள *பின்னிணைப்பு I* இல் காட்டப் பட்டுள்ளன.

3. **மொழிமூலமும் பாடத்திட்டமும் :**

3.1 இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் *பின்னிணைப்பு 2* இல் காட்டப்பட்டுள்ளது.
3.2 இப்பரீட்சை தமிழ் மொழியில் மாத்திரம் நடத்தப்படும்.

4. **தகைமை.**- இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரி கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

4.1 இப்பரீட்சை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தில் பதிவு செய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கானது. மேற்பிரிவில் பத்தாம் ஆண்டில் சித்திபெற்று, பதினொராம் ஆண்டில் கல்வியை மேற்கொள்பவர்களும் ஏற்கனவே இப்பரீட்சையில் தோற்றி சித்தியெய்தாதவர்களும் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும்.

**குறிப்பு.**- (அ) இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரி மேற்குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதனை இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலையொன்றின் ஊடாக மட்டுமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

5. கடந்த ஆண்டில் மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பி வைத்த எல்லா இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் போதுமான விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால்மூலமாக அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்படிவம் கிடைக்காத அல்லது 2006 ஆம் ஆண்டில் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை அனுப்பாத இந்து அறநெறிப் பாடசாலை ஆயின் பாடசாலையின் பெயர், முகவரி, தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளின் தொகை போன்ற விபரங்களைக் குறிப்பிட்டு 5.3 பிரிவிற் குறிப்பிட்ட முகவரிக்கு 2007.10.19 ஆந் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும்.

5.1 விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2007.11.02 ஆந் திகதி ஆகும்.

5.2 விண்ணப்பப்படிவங்கள், தெளிவாகவும் பிழையின்றியும் நிரப்பப்படல் வேண்டும். அங்ஙனம் நிரப்பப்படாத விண்ணப்பங்களும், இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.3 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூல மாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

5.4 விண்ணப்பங்களை இணைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - இந்து சமயம் - 2007" எனவும் பரீட்சைக் குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.5 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழ்களையும் இணைத்து அனுப்பக்கூடாது. இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பாளர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளாரென்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்.**- முதற் தடவையாகத் தோற்றுபவர்கள், பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஏனையோருக்கு பரீட்சைக் கட்டணம் ரூபா 60 ஆகும்.

6.1 பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய விண்ணப்பதாரிகள் (அறநெறிப் பாடசாலை முதல்வர் ஊடாக) நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் அதனைச் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். (முத்திரை/காசுக் கட்டளை மூலமாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த முடியாது)

6.2 அறநெறிப் பாடசாலை முதல்வர்கள் உரிய பரீட்சார்த்தி களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பரீட்சைக் கட்டணத்தை மொத்தமாக அருகாமையிலுள்ள தபாலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

6.3 **பரீட்சைக் கட்டணத்தை மீளப் பெறல்**.- எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம், வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ, மீளப்பெறவோ இயலாததாகும்.

7. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை, பரீட்சை ஆணை யாளர் நாயகத்தினால் உரிய அறநெறிப் பாடசாலை அதிபர்கள்/ பொறுப்பாளர்கள் மூலமாக விநியோகிக்கப்படும்.

7.1 சகல விண்ணப்பதாரிகளும் தாம் முதலாவதாகத் தோற்றும் பாடத்தின் போது தமது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்ப தாரி ஒருவர் தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத போதோ அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு நிலையத்தில் தோற்றும்போதோ அவரது பரீட்சார்த்தித்தகவு இரத்துச்செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம், இந்து அறநெறிப் பாடசாலை அதிபர் மூலம் குறித்த விண்ணப்பதாரியினுடையது என உறுதிப்படுத்தப்படல் வேண் டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு தினங்களுக்கு முன் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து விண்ணப்பங்களை சமர்ப் பித்த இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர், இவ்விட யத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படல் வேண்டும்:-

(1) பரீட்சையின் பெயர் ;
(2) அறநெறிப் பாடசாலையின் பெயர் ;
(3) முழுப் பெயரும் விலாசமும் ;
(4) விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/நகரம் ;
(5) விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்த தபால் நிலையம் ;
(6) பதிவு செய்த இலக்கமும் திகதியும்.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- இந்து அறநெறிப் பாடசாலையொன்றின் மூலம் தோற்றும் மாணவர்கள், பரீட்சை நிலையத்தில் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும் சந்தர்ப்பங்களிலும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு தயாராக சமுகமளித்தல் வேண்டும். இதற்கு கீழ்வரும் ஆவணங்களுள் ஒன்று ஏற்றுக்கொள்ளத்தக்கதா கும் :-

8.1 ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் விநியோகிக்கப் பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

8.2 செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச் சீட்டு ;

9. **சித்திபெற்றமையை தீர்மானித்தலும், பரீட்சை முடிவுகளை வெளியிடலும்**.- இப்பரீட்சைக்குரிய பாடங்கள் 4 ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்தி பெறும் பரீட்சார்த்திகள் மட்டுமே இப்பரீட்சையில் சித்திபெற்றோராகக் கருதப்படுவர்.

ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத் தவறுவோர் நூன சித்தி பெற்றோராகக் கருதப்படுவர். அவர்கள் அடுத்து வரும் மூன்று வருடங்களுக்குள் நூன சித்திப் பாடத்திற்குத் தோற்றி சித்தி பெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றோராகக் கணிக்கப்படுவர். (இது 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)

9.1 **பரீட்சை முடிவுகளை வெளியிடல்**.- விண்ணப்பதாரிகளின் பரீட்சை முடிவுகள் பற்றிய விபரங்கள் இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்/பொறுப்பாளருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- இப்பரீட்சையிற் சித்திபெறும் அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

11. **பரிசு**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுள் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தி பெறுவோருக்கு பரிசுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

12. **விடைத்தாள்களை மீளப் பரிசீலனை செய்தல்**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள், இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்/பொறுப்பாளர் கோரியிருப்பின், விடைத்தாள்கள் மீள் பார்வை யிடுவதற்குரிய வாய்ப்பு வழங்கப்படும். இதற்குரிய கட்டணத்தொகை அவ்வப்போது மாற்றம் பெறுவதால், குறித்ததொகை உரிய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். இக்கட்டணம், பரீட்சை முடிவுகளில் மீள்பரிசீலனையின்போது திருத்தம் இருப்பின் மட்டும் மீளச் செலுத்தப்படும். எக்காரணங் கொண்டும் விண்ணப்பதாரி களுக்கோ அல்லது அவரது பிரதிநிதிகளுக்கோ விடைத்தாள்களை பார்ப்பதற் கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

13. இங்கு குறிப்பிடப்படும் அனைத்து நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கும் அமைய நடந்து கொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ள அதேவேளை, இங்கு குறிப் பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை பரீட்சை ஆணை யாளர் நாயகத்தின் தற்றுணிபுக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

அநுர எதிரிசிங்ஹ,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2007.09.21.

***பின்னிணைப்பு 1***

**குறித்த மாவட்டங்களிலே பரீட்சை மண்டபங்கள் ஏற்படுத்தப் படவுள்ள நகரங்களும் நகர இலக்கங்களும்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| **கொழும்பு மாவட்டம் - 01** | |
| மருதானை | 0101 |
| கொட்டாஞ்சேனை | 0102 |
| பம்பலப்பிட்டி | 0103 |
| நுகேகொட | 0104 |
| அவிசாவளை | 0105 |
| ஹோமாகம | 0106 |
| **கம்பஹா மாவட்டம் - 02** | |
| கம்பஹா | 0201 |
| நீர்கொழும்பு | 0202 |
| வத்தளை | 0203 |
| **களுத்துறை மாவட்டம் - 03** | |
| களுத்துறை | 0301 |
| மத்துகம | 0302 |
| பாணந்துறை | 0303 |
| அழுத்கம | 0304 |
| **காலி மாவட்டம் - 04** | |
| காலி | 0401 |
| **மாத்தறை மாவட்டம் - 05** | |
| மாத்தறை | 0501 |
| தெனியாய | 0502 |
| **ஹம்பாந்தோட்டை மாவட்டம் - 06** | |
| ஹம்பாந்தோட்டை | 0601 |
| **இரத்தினபுரி மாவட்டம் - 07** | |
| இரத்தினபுரி | 0701 |
| கஹவத்தை | 0702 |
| பலாங்கொடை | 0703 |
| இறக்குவானை | 0704 |
| **கேகாலை மாவட்டம் - 08** | |
| கேகாலை | 0801 |
| யட்டியாந்தொட்டை | 0802 |
| வரக்காப்பொல | 0803 |
| **குருநாகல் மாவட்டம் - 09** | |
| குருநாகல் | 0901 |

| நகரம் | நகர எண் |
|---|---|
| **புத்தளம் மாவட்டம் - 10** | |
| புத்தளம் | 1001 |
| சிலாபம் | 1002 |
| உடப்பு | 1003 |
| **அநுராதபுரம் மாவட்டம் - 11** | |
| அநுராதபுரம் | 1101 |
| **பொலன்னறுவை மாவட்டம் - 12** | |
| பொலன்னறுவை | 1201 |
| மன்னம்பிட்டிய | 1202 |
| **மாத்தளை மாவட்டம் - 13** | |
| மாத்தளை | 1301 |
| இரத்தோட்டை | 1302 |
| **கண்டி மாவட்டம் - 14** | |
| கண்டி | 1401 |
| புசல்லாவ | 1402 |
| கலஹா | 1403 |
| கம்பளை | 1404 |
| நாவலப்பிட்டி | 1405 |
| **நுவரெலியா மாவட்டம் - 15** | |
| நுவரெலியா | 1501 |
| ஹட்டன் | 1502 |
| பூண்டுலோயா | 1503 |
| தலவாக்கலை | 1504 |
| மஸ்கெலிய | 1505 |
| **பதுளை மாவட்டம் - 16** | |
| பதுளை | 1601 |
| வெலிமடை | 1602 |
| பண்டாரவளை | 1603 |
| ஹப்புத்தளை | 1604 |
| பசறை | 1605 |
| **மொனராகலை மாவட்டம் - 17** | |
| மொனராகலை | 1701 |
| **அம்பாறை மாவட்டம் - 18** | |
| அம்பாறை | 1801 |
| அக்கரைப்பற்று | 1802 |
| கல்முனை | 1803 |
| திருக்கோயில் | 1804 |
| பொத்துவில் | 1805 |
| சம்மாந்துறை | 1806 |

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| **மட்டக்களப்பு மாவட்டம் - 19** | |
| மட்டக்களப்பு | 1901 |
| களுவாஞ்சிக்குடி | 1902 |
| வாழைச்சேனை | 1903 |
| செங்கலடி | 1904 |
| **திருகோணமலை மாவட்டம் - 20** | |
| திருகோணமலை | 2001 |
| மூதூர் | 2002 |
| **வவுனியா மாவட்டம் - 21** | |
| வவுனியா | 2101 |
| ஓமந்தை | 2102 |
| செட்டிக்குளம் | 2103 |
| **மன்னார் மாவட்டம் - 22** | |
| மன்னார் | 2201 |
| **முல்லைத்தீவு மாவட்டம் - 23** | |
| முல்லைத்தீவு | 2301 |
| புதுக்குடியிருப்பு | 2302 |
| ஒட்டுசுட்டான் | 2303 |
| **கிளிநொச்சி மாவட்டம் - 24** | |
| கிளிநொச்சி | 2401 |
| ஸ்கந்தபுரம் | 2402 |
| பூநகரி | 2403 |
| முழங்காவில் | 2404 |
| பளை | 2405 |
| **யாழ்ப்பாண மாவட்டம் - 25** | |
| யாழ்ப்பாணம் | 2501 |
| சாவகச்சேரி | 2502 |
| பருத்தித்துறை | 2503 |
| வேலணை | 2504 |
| நெடுந்தீவு | 2505 |

*பின்னிணைப்பு 2*

## அறநெறிப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - இந்து சமயம்

*பாடத்திட்டம் :*

(1) சமய வரலாறு
(2) சமய மெய்யியல்
(3) சமய இலக்கியம்
(4) சமய வாழ்வியல்

**01. சமய வரலாறு :**

1.0 இந்து சமயத்தின் பொதுவான வரலாற்று நோக்கு :

1.1 சிந்துவெளி நாகரிகம்
1.2 சனாதன தர்மம்
1.3 வேதகாலம்

1.3.1 வேதகால தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும்

1.4 இதிகாசங்கள்

1.4.1 வகை
1.4.2 தோன்றக்காரணம்
1.4.3 பகவத்கீதை

1.5 புராணங்கள்.

1.5.1 பதினெண் புராணவகை - தோன்றக்காரணம்

1.6 தருமசாத்திரங்கள்

2.0 சைவ சமய வரலாறு :

2.1 சைவசமயத்தின் தொன்மை
2.2 சிந்துவெளி நாகரீக காலச் சிவவழிபாடு
2.3 சிவாகமங்களின் தோற்றமும் வழிபாடும்

3.0 தமிழகத்துச் சைவசமய வரலாறு :

3.1 சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்

3.2 பக்திநெறி :

3.2.1 காரைக்காலம்மையார்
3.2.2 சமயகுரவர் நால்வர்
3.2.3 ஆலயங்களும் வழிபாடும்

3.3 சாத்திரங்களும் தோத்திரங்களும் :

3.3.1 கோயில் கட்டிடங்களின் வளர்ச்சி
3.3.2 திருமுறை, திவ்விய பிரபந்தம் தொகுப்பு
3.3.3 சந்தான குரவர் நால்வர்
3.3.4 மெய்கண்ட சாத்திரங்கள்
3.3.5 பிற்காலத் தோத்திரப் பாடல்கள்

3.4 சைவ நிறுவனங்கள்
மடங்களும் ஆதீனங்களும்

3.5 ஞானியர் வரலாறு :
திருமூலர்

4.0 இலங்கையில் சைவம் -

4.1 தொன்மை
4.2 புராதன ஆலயங்கள் -
(சிறப்பாக) திருக்கேதீச்சரம்
திருக்கோணேச்சரம்
முன்னேச்சரம்
நகுலேச்சரம்
கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

4.3 பிரதேச ஆலய வரலாறு
(மாணவர் தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள ஆலயம் பற்றி அறிதல்)

5.0 இலங்கையில் சைவ மறுமலர்ச்சி :

5.1 பெரியார்கள்
5.1.1 ஆறுமுகநாவலர்
5.1.2 விபுலானந்தர்
5.2 சைவம் வளர்த்த நிறுவனங்கள்
5.3 ஞானியர்

**02. சமய மெய்யியல்**

1.0 வேதங்கள் :

1.1 பல தெய்வக் கோட்பாடு
1.2 ஒரு தெய்வக் கோட்பாடு
1.3 வேதப் பிரிவுகள்

2.0 உபநிடதங்கள் :

2.1 மகாவாக்கியங்கள்
2.2 அறக்கோட்பாடு

3.0 பகவத்கீதை :

3.1 நால்வகை யோகம்

4.0 மூவகை வேதாந்தங்கள்

4.1 அத்துவைதம்
4.2 விசிட்டாத்வைதம்
4.3 துவைதம்
(இவற்றை அறிமுகப்படுத்தினால் போதும்)

5.0 சைவ சித்தாந்தம் :

5.1 மெய்கண்ட சாத்திரங்கள் (14) அறிமுகம்
5.2 சற்கரிய வாதம்
5.3 முப்பொருள் (பதி, பசு, பாசம்)
5.4 சைவநாற்பாதங்கள் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)
5.5 குரு, லிங்க, சங்கம வழிபாடு
5.6 சிவசின்னங்கள்
5.7 தீட்சை

6.0 திருவருட்பயன் - 10 அதிகாரம்

**03. சமய இலக்கியம் :**

1.0 திருமுறைப் பாடல்கள்
(மனனம், பொழிப்பு, சந்தர்ப்பம்)

1.1 திருஞானசம்பந்தர் தேவாரம்
(அ) "வேயுறுதோளி பங்கன்............"
(பதிகம் முழுவதும்)

1.2 அப்பர் தேவாரம்
(அ) "மாதர் பிறை கண்ணியானை............."
(பதிகம் முழுவதும்)

1.3 சுந்தரர் தேவாரம்
(அ) திருக்கேதீச்சரத் திருப்பதிகம்
"நத்தார் படை.............."
(பதிகம் முழுவதும்)

1.4 மாணிக்கவாசகர் - திருவாசகம்
(அ) திருவெம்பாவை (முழுவதும்)
(ஆ) சிவபுராணம்

1.5 திருவிசைப்பா
(அ) "அற்புதத் தெய்வம்.............."
(ஆ) "கற்றவர் விழுங்கும்..............."

1.6 திருப்பல்லாண்டு
(அ) "சீரும்திருவும் பொலிய................"
(ஆ) "ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்................"
(இ) "மிண்டு மனத்தவர்................"

1.7 திருப்புராணம்
(அ) "ஐந்து பேரறிவும்..............."
(ஆ) "தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன் ........."
(இ) "அண்ணலார் தமக்கீடு..............."

1.8 திருமந்திரம்
(அ) "அன்பும் சிவமும்..............."
(ஆ) "உள்ளம் பெருங்கோயில்..............."
(இ) "யாவர்க்குமாம்..............."

1.9 இரண்டாம் திருமுறை
(அ) மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை - கபிலதேவநாயனார்
"திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்......."
காரைக்காலம்மையார் அருளிச்செய்த அற்புதத் திருவந்தாதி
"கண்ணாரக் கண்டும் என் கையாரக் கூப்பியும் ...."

2.0 ஏனைய தோத்திரப் பாடல்கள் :

2.1 திருப்புகழ்-அருணகிரிநாதர்

(அ) "எதிரிலாத பக்தி..............."
(ஆ) "பக்தியால் யானுனை..............."

2.2 அபிராமி அந்தாதி-அபிராமிப்பட்டர்

(அ) "நின்றும் இருந்தும் கிடந்தும்..............."
(ஆ) "சித்தியும் சித்தி தரும் தெய்வமுமாகி..............."
(இ) "கண்களிக்கும்படி கண்டு கொண்டேன் ............"

2.3 பராபரக்கண்ணி-தாயுமானவர்:

(அ) "கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க.........."
(ஆ) "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு"
(இ) "விரும்பு சரியை முதல் மெய்ஞானம் நான்கும்......"
(ஈ) "சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும்..."
(உ) "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே......"

3.0 திவ்விய பிரபந்தங்கள்:
திருப்பாவை-ஆண்டாள்
(அ) "மாரிமழை முழைஞ்சில் முன்னிக் கிடந்துறங்கும்...."
(ஆ) "அன்றிவ்வுலக மறந்தாயடி போற்றி..............."
(இ) "மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்............"

4.0 கந்தபுராணம் :
கந்தவிரதப் பாடல்கள் - 20
(தெரிவு செய்யப்பட்டவை) - பாடல் ஒன்று முதல் இருபது வரை

5.0 பெரிய புராணம் :
கண்ணப்பநாயனார் புராணம்-பாடல் 815 முதல் 835 வரை

6.0 திருவிளையாடற் புராணம்-பரம்சோதி முனிவர்
(அ) கால்மாறியாடின படலம்-1475 பாடல் முதல் 1489 பாடல் வரை

7.0 நீதிப்பாடல்கள் :

7.1 திருக்குறள்-திருவள்ளுவர்
(அ) அறன்வலியுறுத்தல்-4 ஆம் அதிகாரம்
(ஆ) இல்வாழ்க்கை-5 ஆம் அதிகாரம்
(இ) அடக்கமுடைமை-13 ஆம் அதிகாரம்
(ஈ) ஒழுக்கமுடைமை-14 ஆம் அதிகாரம்
(உ) நட்பு - 79 ஆம் அதிகாரம்

**4. சமய வாழ்வியல் :**

1.0 ஆலய வழிபாடும் இறை நம்பிக்கையும் :

1.1 திருக்கோயில் அமைப்பு
1.2 திருக்கோயில் வழிபாடு
1.3 நித்திய, நைமித்திய கிரியைகள்
1.4 இறை நம்பிக்கை (பக்தி அனுபவங்கள்)

2.0 வீட்டில் வழிபாடு :

2.1 நித்திய வழிபாடு (காலை, மாலை வழிபாடு)
2.2 விசேட வழிபாடு -
(அ) கூட்டு வழிபாடு
(ஆ) தியானம்
(இ) செபம்
2.3 அகப்புறத் தூய்மை

3.0 விரதங்களும் பண்டிகைகளும் :

3.1 விரதங்கள் :
(அ) சிவராத்திரி
நவராத்திரி
விநாயகர் சதுர்த்தி
கந்தசஷ்டி
விநாயகர் சஷ்டி
திருவாதிரை
பிரதோஷம்
வைகுண்ட ஏகாதசி
(ஆ) அமாவாசை, பூரணை விரதங்கள்

3.2 பண்டிகைகள் -
3.2.1 தைப்பொங்கல்
3.2.2 சித்திரை வருடப் பிறப்பு
3.2.3 ஆடிப்பிறப்பு
3.2.4 தீபாவளி
3.2.5 கார்த்திகை விளக்கீடு

4.0 அபரக் கிரியைகள் :
4.1 பொது விளக்கீடு
4.2 மரணக் கிரியைகள்
4.3 சபிண்டீகரணம்
4.4 சிரார்த்தம்

5.0 சமய, ஆன்மீக விழுமியங்கள் :
5.1 பெற்றோர், மூத்தோர், பெரியோர், குரு ஆகியோரைக் கனம் பண்ணல்
5.2 நற்குடி மக்களாக வாழ்வதற்கு உதவும் நெறிமுறைப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்
5.3 அன்பு, உண்மை, கருணை, இன்னா செய்யாமை, பிறர் நலம் பேணல், கூடி வாழும் பண்பு, நீதி, கடமையுணர்வு முதலிய மனித விழுமியங்களைப் பேணல், இவற்றை அறிந்துகொள்ளல்.

6.0 சமய வாழ்வுடன் கலைகள் :

| | |
|---|---|
| இசை | பண்ணிசை |
| நடனம் | சிற்பம் |
| கட்டடம் | ஓவியம் |
| சாத்துப்படி | சுவாமிக்கு அலங்காரம் செய்தல் |
| மாலை கட்டுதல் | கோலம் போடுதல் |

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 2.30 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.**

**அட்டவணை - 2007**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 05.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.09.2007 |
| | | வெள்ளி | 12.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.09.2007 |
| | | வெள்ளி | 19.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2007 |
| | | வெள்ளி | 26.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2007 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 02.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.10.2007 |
| | | வெள்ளி | 09.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.10.2007 |
| | | வெள்ளி | 16.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.11.2007 |
| | | வெள்ளி | 23.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.11.2007 |
| | | வெள்ளி | 30.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.11.2007 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 07.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.11.2007 |
| | | வெள்ளி | 14.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.11.2007 |
| | | வியாழன் | 20.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.12.2007 |
| | | வெள்ளி | 28.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.12.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.